சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 123/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | சாந்தா |
| கணவர் பெயர் | : | பாரதி |
| கிராமம் | : | ஆண்டிபந்தல் |
| தாலுக்கா | : | நாகப்பட்டினம் |
| தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| வயது | : | 26 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவள் ஆவேன். எனது பெற்றோர்கள் வீடு திருத்துறைப்பூண்டியில் உள்ள அண்ணா நகரில் உள்ளது. கடந்த 19.03.2025 ஆம் தேதி எனது பெற்றோர்களை பார்க்க நான் திருத்துறைப்பூண்டி சென்றிருந்தபோது மதியம் 12.35 மணியளவில் எனக்கு அ.சா-3 நந்தினி எனக்கு

போன் செய்து தான் சென்னையில் உள்ளதாகவும், திருத்துறைப்பூண்டியில் உள்ள வீட்டில் தனது தங்கை நந்துதாஷினி தூக்கு மாட்டிக்க போவதாக சொன்னதாக என்னிடம் சொன்னார். என் வீட்டிற்கு அருகாமையில் தான் அ.சா-3 நந்தினி வீடு உள்ளது. அதனால் உடனே நானும், எனது தெருவில் உள்ள அருள்செல்வி மற்றும் ரவி ஆகியோர்களை அழைத்துக்கொண்டு அ.சா-3 நந்தினி வீட்டிற்கு சென்றோம். கதவு உள்புறமாக சாத்தி இருந்தது. இதனால் கதவைதட்டி பார்த்தோம். பதில் இல்லை என்பதால் கதவை உடைத்து உள்ளே சென்றோம். உள்ளே போய் பார்த்தபோது அ.சா-3 ன் சகோதரியான நந்துதாஷினி என்பவர் தூக்கில் தொங்கிக்கொண்டிருந்தார். அதன் பின்னர் கீழே இறக்கி ஆட்டோவில் ஏற்றி திருத்துறைப்பூண்டி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரனை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.19 18:20:55 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.